# இலங்கைப் பாராளுமன்றம்
## பதவி வெற்றிடங்கள்

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் வெற்றிடம் நிலவுகின்ற பின்வரும் பதவிகளுக்கு நல்ல தேகாரோக்கியமும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு இணங்க தயாரித்த விண்ணப்பங்கள் கல்வி மற்றும் அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் **"பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே"** எனும் முகவரிக்கு 2025.03.10 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும் (இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை **www.parliament.lk** என்ற இணையத் தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்).

### 1. முறைமைகள் வடிவமைப்பாளர் (பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01)

**1.1 சம்பள அளவுத்திட்டம்:-**

2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ.52,955-5x1,335/8x1,630 - 72,670/- (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்கு உரிய மாதாந்த ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த சம்பளம் சுமார் ரூ. 129,000/-).

**1.2 வயதெல்லை:-**

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 22 வயதுக்கு குறையாமலும் மற்றும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

**1.3 கல்வித் தகைமைகள்:-**

கணனி விஞ்ஞான/தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT)/தகவல் தொழில்நுட்ப B.Sc பட்டம்.

**1.4 அனுபவம்:-**

வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு - தகைமைகளை பெற்றதன் பின்னர் ஒரு முறைமைகள் வடிவமைப்பாளராக ஐந்து (05) வருடங்களுக்கு குறையாத சேவை அனுபவம்.

உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு - தகைமைகளை பெற்றதன் பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியின் தகவல் முறைமைகள் மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தில் எட்டு (08) வருடங்களுக்கு குறையாத சேவை அனுபவம்.

**1.5 ஆட்சேர்ப்பு முறை:-**

எழுத்துமூல/செயன்முறை பரீட்சைகள் மற்றும் ஒரு நேர்முக பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

## 2. தரவுத்தள கட்டுப்பாட்டாளர் (வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01)

### 2.1 சம்பள அளவுத்திட்டம்:-

2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ.52,955-5x1,335/8x1,630 - 72,670/- (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்கு உரிய மாதாந்த ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த சம்பளம் சுமார் ரூ. 129,000/-).

### 2.2 வயதெல்லை:-

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 22 வயதுக்கு குறையாமலும் மற்றும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

### 2.3 கல்வித் தகைமைகள்:-

கணனி விஞ்ஞான/தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT)/தகவல் தொழில்நுட்ப B.Sc பட்டம்.

### 2.4 அனுபவம்:-

வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கு - தகைமைகளை பெற்றதன் பின்னர் ஒரு தரவுத்தள கட்டுப்பாட்டாளராக ஐந்து (05) வருடங்களுக்கு குறையாத சேவை அனுபவம்.

உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு - தகைமைகளை பெற்றதன் பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியின் தகவல் முறைமைகள் மற்றும் முகாமைத்துவ திணைக்களத்தில் எட்டு (08) வருடங்களுக்கு குறையாத சேவை அனுபவம்.

### 2.5 ஆட்சேர்ப்பு முறை:-

எழுத்துமூல/செயன்முறை பரீட்சைகள் மற்றும் ஒரு நேர்முக பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

## 3. கணனி நிகழ்ச்சித்திட்ட வகுப்பாளர் (வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01)

### 3.1 சம்பள அளவுத்திட்டம்:-

2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ. 43, 565-9x755/6x930 - 55,940/- (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்கு உரிய மாதாந்த ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த சம்பளம் சுமார் ரூ. 104,000/-).

### 3.2 வயதெல்லை:-

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 22 வயதுக்கு குறையாமலும் மற்றும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

### 3.3 கல்வித் தகைமைகள்:-

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக்கழகம் வழங்கிய கணனி/தகவல் தொழில்நுட்பம்/தகவல் முறைமை பற்றிய ஒரு பட்டத்தைப் பெற்றிருத்தல்.

**அத்துடன்**

சிங்களம்/தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்திகளுடன் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆறு பாடங்களில் (06) இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

**3.4 அனுபவம்:-**

தகமைகள் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் ஒரு கணனி நிகழ்ச்சித்திட்ட வகுப்பாளராக PHP, PHP Framework, Java, JavaScript பிரயோகங்களை பயன்படுத்தி இணையத்தள முறைமையை நிர்மாணித்தல் மற்றும் MSSQL, MySQL பிரயோகங்கள் RDBMS என்பன தொடர்பாக மூன்று (03) வருடங்களுக்கு குறையாத அனுபவத்தை பெற்றிருத்தல்.

HTML, CSS, jQuery மற்றும் Responsive Frameworks போன்றவற்றில் நிபுணத்துவமும் மற்றும் பிரச்சினைகள் தீர்த்தல் திறன்கள் அதிகளவில் இருத்தலும், ஆகக்குறைந்த மேற்பார்வையில் சுயாதீனமாக பணியாற்றும் திறமை இருத்தலும் மிகவும் விரும்பத்தக்கது.

PHP Frameworks இல் அனுபவம் மேலதிக தகைமையாக கருதப்படும்.

**3.5 ஆட்சேர்ப்பு முறை:-**

எழுத்துமூல/செயன்முறை பரீட்சைகள் மற்றும் ஒரு நேர்முக பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**4. உதவி கணனி நிகழ்ச்சித்திட்ட வகுப்பாளர் (வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01)**

**4.1 சம்பள அளவுத்திட்டம்:-**

2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பற்றிய சுற்றறிக்கையின் I ஆம் அட்டவணைக்கு இணங்க, இந்தப் பதவிக்கு உரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூ.34,605-9x660/3x755 - 42,810/- (சகல மேலதிக கொடுப்பனவுகளும் அடங்கலாக இந்த சம்பள அளவுத்திட்டத்திற்கு உரிய மாதாந்த ஆகக்குறைந்த ஆரம்ப முழுமொத்த சம்பளம் சுமார் ரூ. 90,000/-).

**4.2 வயதெல்லை:-**

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் மற்றும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**4.3 கல்வித் தகைமைகள்:-**

கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் (பழைய பாடத்திட்டம்) ஒரே தடவையில் நான்கு (04) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்/(புதிய பாடத்திட்டம்) ஒரே தடவையில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**அத்துடன்**

சிங்களம்/தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம்/ஆங்கில இலக்கியம் ஆகிய பாடங்களில் திறமைச்சித்திகளுடன் க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல்.

**4.4 தொழில் தகைமைகள்:-**

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனத்திலிருந்து தகவல் மற்றும் தகவல் தொடர்பாடல் (ICT) பற்றிய ஒரு டிப்ளோமா சான்றிதழை பெற்றிருத்தல்.

**4.5 அனுபவம்:-**

PHP மற்றும் MySQL ஆகியவற்றில் அனுபவம் விரும்பத்தக்கது.

**4.6 ஆட்சேர்ப்பு முறை:-**

எழுத்துமூல/செயன்முறை பரீட்சைகள் மற்றும் ஒரு நேர்முக பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

**5. பரீட்சை நடைமுறை:-**

(அ) எழுத்துமூல/செயன்முறை பரீட்சை

எழுத்துமூல/செயன்முறை பரீட்சையில் தொழில் பொறுப்புக்கள் தொடர்பாக விண்ணப்பதாரர்களின் அறிவு மற்றும் புரிந்துகொள்ளல் ஆகியன பரிசீலிக்கப்படும். பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் நூறு **(100)** ஆகும்.

(ஆ) நேர்முகப்பரீட்சை

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் ஒரு நேர்முகப் பரீட்சைக் குழுவினால் விண்ணப்பதாரர்களின் தகைமைகள் பரீட்சிக்கப்படும்.

எழுத்துமூல/செயன்முறை பரீட்சையில் நாற்பது (40) புள்ளிகளுக்கு அதிக புள்ளிகளை பெறும் விண்ணப்பதாரிகள் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முக பரீட்சையில் பின்வரும் தகவுதிறன்களுக்கு இணங்க புள்ளிகள் வழங்கப்படும். நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்கூடிய புள்ளிகள் நூறு (100) ஆகும் .

| **தொடர் இலக்கம்** | **தகவுதிறன்கள்** |
|---|---|
| 1 | மேலதிக கல்வி மற்றும் தொழில் தகைமைகள் |
| 2 | விடய அறிவு |
| 3 | தொழில் அனுபவம் |
| 4 | ஆளுமை, நேர்முகப் பரீட்சையின் போது காட்டும் திறமைகள் |

**6. சேவை நியதிகளும் நிபந்தனைகளும்:-**

(i) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்குரிய ஓய்வூதிய உரித்து எதிர்காலத்தில் அரசாங்கம் எடுக்கும் கொள்கைத் தீர்மானங்களுக்கு அமைய நிர்ணயிக்கப்படும். முதலில் மூன்று (03) வருட கால தகுதிகாண் அடிப்படையில் நியமனம் வழங்கப்படும். அரச/ மாகாண அரச சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவி ஒன்றில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் ஒரு வருட கால பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

(ii) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சாத்திகள் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதிப் பிரமாணக்குறிப்புகளுக்கும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கும் இணங்க இயைந்தொழுக வேண்டும்.

(iii) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சாத்திகள் அரசாங்கம் குறித்துரைக்கும் ஒரு விகிதத்தில் தத்தமது சம்பளத்திலிருந்து விதவைகள், அநாதைகள்/தபுதாரர்கள் பற்றிய ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.

(iv) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சாத்திகள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(v) தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சாத்திகள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு விடுவிப்பு அறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

7. விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகள் அல்ல) இணைத்து அனுப்ப வேண்டும். சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் கேட்டுக்கொள்ளப்படும் போது மாத்திரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) பிறப்பு சான்றிதழ்
(ஆ) கல்வித் தகைமை சான்றிதழ்கள்
(இ) தொழில் தகைமை சான்றிதழ்கள்
(ஈ) அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள்

8. அரச/மாகாண அரச சேவையில்/அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில்/நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள/ நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும்.

9. பதவியை பெற ஏதாவது ஒரு விதத்தில் அழுத்தம் செலுத்துவது தகுதியீனத்திற்கு வழிவகுக்கும்.

10. விண்ணப்பத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஏதாவது தகவல்கள் விண்ணப்பதாரர் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னர் பிழையானது என கண்டறியப்பட்டால், அப்போது அவர் தகைமையற்றவர் என குறிப்பிடப்படுவதற்கும் மற்றும் நியமனத்தின் பின்னர் அவ்வாறு கண்டறியப்பட்டால் பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கும் காரணமாக அமையும்.

11. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு பின்னர் கிடைக்கின்ற அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகள் இன்றி அனுப்பப்படுகின்ற அல்லது திணைக்கள/ நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படாத (தற்பொழுது அரசாங்க/மாகாண அரசாங்க சேவையில்/கூட்டுத்தாபனங்களில்/நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றுகின்ற) அல்லது மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**குஷானி ரோஹணதீர**
**பாராளுமன்ற செயலாளர் நாயகம்**

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே
2025......... ஆம் திகதி